JARJ Jamal Academic Research Journal-an Interdisciplinary ISSN(P): 0973-0303
SINCE 1951 S.Sugavaneshwaran, JARJ-Vol-3-1-May-2022:204-216 ISSN(O): 2582-5941

உலக ஒருமைப்பாட்டிற்கு நபிகளாரின் வழி

The Guidance of Prophet (Pbuh) to the Universal Unity

Dr. S.Sugavaneshwaran
Assistant Professor of Tamil, Jamal Mohamed College (Autonomous),
Tiruchirappalli – 620 020. India

Abstract

Simplicity, Charity, Social harmony, Equality, Priority to poor, Remarriage, Tolerance and so on are the characteristics of the Prophet (Pbuh). This article explores his life causes to the contemporary Universal Unity, with the reference to Mu.Meth's "Nayagam Oru Kaviyam".

Keywords: Zakhat, Charity, Faith, Revelation, Salah, Monotheism.
Corresponding author E-Mail: sugavaneshwaranjmc84@gmail.com

கவிதை, கட்டுரை, புனைகதை இலக்கியங்கள் என்பன சமகால மக்களின் வாழ்வியலை துரிதமாகப் பேசும் இலக்கிய வடிவங்களாகும்.அந்த வகையில் நபிகள் நாயகம் அவர்களின் வாழ்க்கை வரலாற்றைக் கவிதைத்தொகுப்பாக்கி **'நாயகம் ஒரு காவியம்'** எனும் காவியமாய்த் தந்திருப்பவர் மு.மேத்தா அவர்கள்.'இறைவன் (அல்லாஹ்) ஒருவனே அவனுக்கு இணை, துணை யாரும் இல்லை என்ற தத்துவத்தை முன்மொழிந்தவர் நபி அவர்கள்.அவரே இறுதியான இறைத் தூதர்.தன் ஓரிறைக் கோட்பாட்டை நிலைநிறுத்திய அவர்கள் மாற்று மதத்தை மதிக்கும் மாண்பு, ஏழைக்கு முன்னுரிமை, அனைவரும் சமம், பொறுமை குணம், ஈகைக்குணம் போன்ற மானுடத்திற்குத் தேவையான நல்லறத்தை வழியுறுத்தினார்.அத்தகைய நல்லறம் உலக ஒற்றுமைக்கு எவ்வாறு ஊன்றுகோளாகிறது என்பதை விவரிக்கிறது இக்கட்டுரை.

நபிகளாரின் தோற்றம்

இஸ்லாம் மார்க்கத்தைத் தோற்றுவித்த முகமது நபி அவர்கள் (நபிகள் நாயகம்) அரபு நாட்டில் உள்ள மெக்காவில் கி.பி.571ஆம் ஆண்டு ஏப்ரல் 20 ஆம் தேதி பிறந்தார். தான் பிறப்பதற்கு முன்பே தந்தையை இழந்தார். பிறகு சில ஆண்டுகள் முடிந்து தாயும் இறந்துவிட்டார்; தன் (தாத்தா) பாட்டனார் முத்தலிபு என்பவராலும் பிறகு தனது பெரிய தந்தை (பெரியப்பா) அபுதாலிபு என்பவராலும் வளர்க்கப்பட்டார். 40 ஆவது வயதில் நபிப்பட்டம் அவருக்கு அருளப்பட்டது. 63 வயதில் மரணமடைந்தார். முறையாக கல்வி பயிலாதவர். ஆனாலும் அனுபவ அறிவு அவரக்கு உதவியது. நபி அவர்களின் சிறப்பு குறித்து உலகவரலாறு, என்னும் நூல்,

"முறையான கல்வி பயிலாவிட்டாலும், சீரிய ஒழுக்கமும், நற்பண்புகளும் கொண்டவராக நபிகள் நாயகம் திகழ்ந்தார்.இளமையில் அவர் பல துயரங்களை

அனுபவித்தாலும், வர்த்தகம் செய்வதற்காகப் பல பகுதிகளுக்குச் சென்று வந்ததால் வாழ்க்கை அனுபவங்கள் பலவற்றைப் பெற்றார்.மக்களுக்குத் தொண்டுகள் புரிந்தார்"[1] என்று குறிப்பிடுகிறது.

இல்லாத ஏழை எளியவர்க்கு ஜக்காத் என்னும் ஏழைவரி கொடுக்கப்பட வேண்டும் என்ற கொள்கைகளை இஸ்லாம் தன் ஐம்பெரும் கடமைகளில் ஒன்றாக வலியுறுத்துகிறது.இக்கொள்கையை மக்களுக்கு எடுத்துக்கூறி தானே ஒரு முன்மாதிரியாக நபிகள் நாயகம் விளங்கினார்.தன் மனைவியின் செல்வமாயினும் அதை வறியவருக்கே வாரி வழங்கினார் என்று அவரது வாழ்க்கை வரலாறு சொல்கிறது. இதனைக் கவிதை வரிகளாக,

வையத்தில்
மனைவிக்குத் தெரிந்தே
மனைச் செல்வத்தினை
வறியவர்க் கெல்லாம்
வாரி வழங்கிய
முதல் மனிதரும்
கடைசி மனிதரும்
முகமதுதான்! [2]

என்று மு.மேத்தா குறிப்பிடுகிறார்.அதுபோலவே கதீஜா நாயகியின் மனமும் நம்பொருள் நமக்கானது அல்லது அது நம் கணவருக்கு உரித்தானது என்ற உயர்ந்த நற்குணம் கொண்டவராகவும் இருந்தார் என்பதை மேத்தாவின் கவிதை உணர்த்துகிறது.

முகமது அவர்களுக்கு
வள்ளல், எனும் பட்டம்
வழங்குவதற்காக
காலங்காலமாய்க்
காத்திருந்தது
கதீஜா நாயகியின்
கஜானா![3]

கதீஜா நாயகியின் உயர்ந்த குணத்தைப் பேசும் மேத்தா தன் சொக்க வைக்கும் வார்த்தைகளால் (நடை) வாசகர் மனதில் சிம்மாசனம் போட்டு அமர்கிறார்.

ஈகை

எழுத்துக்கு எளிமை என்ற அணிகலனையே சூட்டிப் பார்க்கும் மு.மேத்தா அவர்கள் வரலாற்றில் எளிமையின் இன்னுருவாய் வாழ்ந்த நபிகளாரின் எளிமை வாழ்க்கையைச் சிறப்புற கவிதையால் வடித்திருக்கிறார். மண்ணுலகில் வறுமை ஒழிந்து மானுடம் செழிக்க அனைவரும் இன்புற்று வாழ ஈகைக்குணம் தனிமனிதனுக்கு அவசியமானது. இருப்பவன் இல்லாதவனுக்குக் கொடுத்து உதவும் மனமிருந்தால் ஏழை பணக்காரன் என்ற பேதமிருக்காது என்ற கருத்தை வாய்மொழியாக மட்டும் சொல்லாமல் ஐம்பெரும் கடமைகளில் ஒன்றாகவே முன்மொழிந்திருக்கிறார் நபி அவர்கள். அது ஜக்காத் (ஈகை) என்னும் ஏழைவரி என்று அழைக்கப்படுகிறது.

காலடியில் மகுடங்கள்
காத்துக் கிடந்தன
இவரோ ஓர்
ஏழையாகவே
இறுதிவரை வாழ்ந்தார்!
உலக அதிசயங்களில்
இது ஓர்
ஒப்பற்ற அதிசயம்![4]

என்று நபிகளாரின் எளிமை வாழ்வை கவிதையால் சொல்கிறார் மு.மேத்தா. நபி அவர்கள் தனக்குப் பிறரால் கிடைத்த செல்வத்தை தனக்குப் பயன்படுத்தாமல் இல்லாத வறியவருக்குக் கொடுத்து மானுடத்தின் வறுமையைப் போக்கும் வள்ளலாய் வாழ்ந்தார்.செல்வத்தின் பயன் என்பது பிறருக்குக் கொடுப்பதில்தான் இருக்கிறது என்கிறது புறநானூறு.இதனை **செல்வத்துப் பயனே ஈதல்**[5] என்ற அடி சொல்லும்.எனவே மானுடம் மலர ஈகை என்னும் பெருங்குணம் வேண்டும் என்ற பெருஞ்சிந்தனையைச் சொன்னதோடு மட்டுமல்லாமல் அதைத் தன் இலக்கணமாய்ச் செய்தும் காட்டினார்.

மறுமணம்

கணவனை இழந்த பெண்ணுக்குக் காட்டுவது இல் என்றுரைப்பர்.குழந்தைமணம் கூடாது, பொருந்தாமணம் கூடாது என்றெல்லாம் முற்போக்கு எண்ணங்கள் தோன்றிய நாடு தமிழ்நாடு. ஆனால் 1500 ஆண்டுகளுக்கு முன்பாகவே 'கதீஜா நாயகி, என்னும் விதவைப் பெண்ணை மணந்து முற்போக்குப்

புரட்சியை விதைத்தார் நபி அவர்கள்' தமிழ்க் கவிஞர்களில் பாவேந்தர் பாரதிதாசன் மறுமணக் கொள்கையை ஆதரித்தவர்.

பேடகன்ற அன்றிலைப்போல் மனைவி செத்தால்
பெருங்கிழவன் காதல்செய்யப் பெண்கேட் கின்றான்
வாடாத பூப்போன்ற மங்கை நல்லாள்
மணவாளன் இறந்தால்பின் மணத்தல் தீதோ!
பாடாத தேனீக்கள், உலவாத் தென்றல்
பசியாத நல்வயிறு பார்த்த துண்டோ?[6]

என்ற கவிதை வரிகளின்மூலம் பாரதிதாசன் மறுமணக் கொள்கையை ஆதரித்தமை புலப்படுகிறது.இதனையே மு.மேத்தா அவர்களும் முகமது நபி அவர்களின் கொள்கையைக் கவிதையாக்கியுள்ளார்.

விதவையென் றொதுக்கு வாரா?
வீண்மொழி அடுக்கு வாரா?[7]

பெரியாரும் இச்சிந்தனைக்கு உரியவர்.கடவுள் ஏற்பாளரும் கடவுள் மறுப்பாளரும் இக்கொள்கைகளில் ஒன்றுபட்டு நிற்கின்றனர்.

வஹீ - அழைப்பு

பிலால் என்னும் கறுப்பினத்தவர் ஓரிறைக் கோட்பாட்டை ஏற்றுக் கொண்டவர். அவரை ஏழை என்றோ, கறுப்பர் என்றோ வெறுத்து ஒதுக்காமல் முதன் முதலில் பாங்கு சொல்ல அந்த கறுப்பினத்தவரையே அழைத்தார். ஏனென்றால் நிறத்தாலோ, பிறப்பாலோ எவரும் தாழ்ந்தவர் இல்லை என்ற உயர்ந்த கொள்கைப் பண்புடையவராக நபி அவர்கள் விளங்கினார். வெளிநாடுகளில் நிறமே பேதத்திற்குக் காரணமாக இருக்கின்றது. ஆனால் பன்நெடுங்காலத்திற்கு முன்பே கறுப்பினத்தவரை அழைத்து அங்கிகாரம் செய்து **"மக்களைத் தொழுகைக்கு எவ்வாறு அழைக்க வேண்டுமென்று தீர்மானித்தபின், முதன் முதலாக பாங்கு சொல்லும் வாய்ப்பினை பிலாலுக்கே வழங்கினார்கள்"**[8] என்பார் மு.மேத்தா

அத்தகைய பிலாலைப் பற்றி மேத்தா தம் கவிதைகளில்,

கறுப்பர் இனத்தில் பிறந்து வளர்ந்தவர்
அடிமையாய் இங்கும் அங்கும் அலைந்தவர்
நிலக்கரியாக நெடுநாள் வாழ்ந்தவர்
நபிகள் நாயகம் நயன விழிகளில்
பட்டதும் தொட்டதும் பசும்பொன் னானவர்

பிலால்என் பதுஅவர் பெயராம்!

....

குரலா லும்தம் கொள்கையி னாலும்

ஓங்கி வளர்ந்தவர் உன்னத மானவர்

அருள்மனங் கொண்ட அண்ணலின் தோழர்

அடிமை பிலாலின் தளையினை அகற்றித்

தாமதமின்றித் தன்வசம் வந்த

குயிலுக்கு விடுதலை கொடுத்தார்

பாங்குடன் அக்குயில் பாங்கு சொல்லவோ?[9]

என்று பிலாலின் வரலாறும் நபி அவர்களின் இரக்கக் குணமும் அநீதிக்கு எதிரான போர்க் குணமும் திறம்பட கவிதைகளில் வெளிப்படுகிறது.

அநீதிக்கு எதிரான குணம் கொண்டவரே நீதியின் மீது தாகம் கொண்டவர் ஆவர்.பிலால் என்பவர் நிறபேதத்தால் அல்லல்பட்டபோது அவரை விடுதலை செய்து அழைத்து நல்வழிப்படுத்தியவர் முகமது நபி அவர்கள். இதனைச் சிறப்பிக்கும் பொருட்டு நபி அவர்களின் நேர்மைச் சிறப்பை இவ்வாறு உரைப்பார்.

உறுகொடுமை செய்தவரை ஒடுக்க வேண்டும்!

ஒடுக்கப்பட் டிருப்போரை உயர்த்த வேண்டும்

வறியவரை ஏழையரைக் காக்க வேண்டும்

வருகின்ற பயணிகட்கும் உதவ வேண்டும்[10]

என்ற நபிகளாரின் ஒட்டுமொத்த நற்சிறப்பையும் மேற்கூறிய நான்கு வரிகள் வெளிப்படுத்துகின்றன.தொழுகை எவ்வளவு மேன்மையுடைய பண்பு என்பதையும் அதை நபி அவர்களால் பெற்று எத்தகைய சிறப்பை அடைந்தோம் என்பதையும் பின்வரும் கவிதை வரிகள் பகர்கின்றன.

பிறந்தபோது

எங்களுக்கு அழத் தெரிந்தது!

உன்னை

அறிந்தபோது தானே

தொழத் தெரிந்தது

தொழத் தெடங்கினோம்

அதனால்

தூக்கத்திலிருந்து

எழத் தொடங்கினோம்![11]

என்ற வரிகள் நபிகள் நாயகத்தின் நேர்மைக்கும் சீரிய ஒழுக்கத்திற்கும் சான்றாக அமைவதோடு மட்டுமல்லாமல் தொழுகை என்ற இறைவழிபாட்டில் மக்கள் கொண்ட நம்பிக்கைக்குச் சான்றாகவும் அமைகிறது.

நேர்மை

செவிநுகர் கனிகளாய்த்
தேன்மொழிப் பேச்சும்
நினைவில் செயலில்
நேர்மையின் வீச்சும்[12]

என்று சொல்லிலும் செயலிலும் நேர்மையுடையவராகவே நபிகள் இருந்தார்.நின்ற சொல்லர் நீடுதோறும் இனியர், என்று நற்றிணையின் முதல் பாடலில் தலைவி தலைவனைக் கூறுவதாக இருக்கும் அந்த வரிக்குப் பொருத்தமானவராக நபி விளங்கினார் எனலாம். இங்கு ஒரு வித்தியாசம் நற்றிணைத் தலைவன் அகத்திற்கு (காதல்) மட்டும் தலைவராயிருக்க நபியோ! அகத்திற்கும், புறத்திற்கும் (நாடு, வீடு) தலைவராக இருக்கிறார்.ஏனென்றால் எதைச் சொன்னாரோ அதையே செய்தார் எதைச் செய்தாரோ அதையே சொன்னார்.இத்தகைய நேர்மையான மானுடப் பண்பு யாவர்க்கும் இருக்குமானால் நாட்டில் தொல்லைகள் அற்ற சமூகம் நின்று வாழும் என்பது திண்ணம்.

பாடங்கள் ஐந்து

எழுதப்படிக்கத் தெரியாத நபி அவர்கள் இந்த ஞாலத்திற்குப் புத்தகமானார்.ஏனென்றால் அவர் அல்லா (இறைவன்) என்னும் ஆசானிடத்தில் கற்றதனால் என்பார் கவிஞர் மு.மேத்தா.மேலும் உலகப் பல்கலைக்கழகத்தில் நபிகளின் பாடங்கள் ஐந்து அவை கலிமா, தொழுகை, நோன்பு, ஜக்காத், ஹஜ் என்கிறார். இதனை,

கல்லாத நபியே! நீங்கள்
கற்றதெல்லாம்
அல்லா என்னும்
ஆசானிடத்திலோ?
பள்ளிக் கூடத்தையே
பார்க்காத நீங்கள்
பள்ளிகளைக்

கட்டிக் கொடுத்தீர்களே
படைத்தவனை ஐவேளை
படிப்பதற்காகவோ?
.....
பாரெல்லாம் நடைபெறும்
உங்கள்
பல்கலைக் கழகத்தில்
பாடங்கள் ஐந்தோ?
கலிமா, தொழுகை,
நோன்பு, ஜக்காத்
பாடங்கள் ஐந்தே[13]

என்ற கவிதைமூலம் குறிப்பிடுகிறார்.

சுயநலமற்றவர்

தனிமனித வாழ்விலும் பொது வாழ்விலும் சுயநலமற்றவரே தூய மனிதராவர்.அத்தகைய சிறப்புக்கு உரியவர்கள் உலகத்தில் பலர் உண்டு.அவர்களில் நபிகள் நாயகம் முதன்மையில் இருக்கும் குறிப்பிடத் தகுந்தவர்.அண்ணல் நபி அவர்களுக்கு தம்முடைய மகள் ருக்கையா மற்றும் உம்முகுல் இருவரையும் அபூலகப் என்பவரின் இரண்டு மகன்களுக்கும் மணமுடித்து வைத்திருந்தார். அந்த இருபெண்களையும் மணவிலக்குச் செய்யுமாறு (விவாகரத்து) மகன்களுக்கு உத்தரவிட்டார் அபூலகப், அதன் படியே உத்பா என்ற மூத்த மகனும் உதைபா என்ற இளையமகனும் விவாகரத்துச் செய்து நபிகளாரின் வீட்டிற்கு அனுப்பி வைத்தனர். ஓரிறைக் கோட்பாட்டை பெருமானார் முன்மொழிந்ததால் தன் மகள்களின் வாழ்க்கைப் பறிபோனது. ஆனாலும் அன்று தான் கொண்ட கொள்கையில் மாறாமல், தன் குடும்பத்திற்காக கொள்கைகளை விட்டுக் கொடுக்காமல் உறுதியாக நின்றார். அதனால் இன்று வரலாற்றில் நிலைத்து நிற்கிறார்.

இடும்பைகள் செய்வோர்க் கிங்கே
இதயமே இல்லை! ஆனால்
குடும்பத் துயருக் காகக்
கொள்கையை இழப்பதாமோ?[14]

என்று கவிதைவரிகள் உணர்த்துகின்றன.குடும்பத்துயருக்காகக் கொள்கைகளை இழக்காதவர் என்றும் கூறலாம்.கொள்கைக்காக குடும்பத்தை இன்னலுக்கு உள்ளாக்கியர் என்றும் கூறலாம்.

இன்றைய தலைமை தொண்டனுக்குத் துன்பத்தையும் தலைமைக்குச் சுகத்தையும் எதிர்பார்க்கும் சுயநலமுடைய கூட்டமாகவே இருக்கிறது.தந்தை பெரியார் தம் பொதுவாழ்வில் தன் குடும்பப் பெண்களையும் பங்கெடுக்கச் செய்தார்.கள்ளுக்கடை மறியலில் பெரியாரின் மனைவி மற்றும் சகோதரி பங்கெடுத்தனர் என்பது பிரபஞ்சன் தம் கவிதைகளில் பதிவு செய்கிறார்.

தொண்டனுக்குச் சிறைவாசம்
தலைவனுக்குச் சுகவாசம் என்னும்
குண்டர் தலைவர்கள்
கோலோச்சும் காலத்தில்
தம் வீட்டுப்
பெண்டுகளைத் தண்டனைக்குத்
தந்த பெருமானி ![15]

என்பது கவிதை வரிகள்.இக்கவிதைவரி பெரியாருக்கும் பொருந்தும் நபி அவர்களுக்கும் பொருந்தும்.

இன்னலைப் பொறுத்த பொறுமைகள்

ஆன்மீகக் கருத்தையும் பகுத்தறிவாதக் கருத்தையும் சுதந்திரக் கருத்தையும் போதிக்க வந்த தலைவர்கள் அனைவரும் வெற்றி என்ற ஒன்றைப் பெற்றிருக்கிறார்கள் என்றால் அதற்குப் பொறுமை என்ற ஆயுதம் முக்கிய ஒன்றாக இருந்திருக்கிறது.

உலகத் தத்துவஞானி சாக்ரடீஸ், ஓரிறைக் கோட்பாட்டை உலகறியச் செய்தஏந்தல் நபி, பகுத்தறிவுக் கொள்கைகளை அஞ்சாமல் எடுத்துரைத்த தந்தை பெரியார் போன்றவர்கள் குறிப்பிடத் தகுந்தவர்கள்.

கிரேக்கத்தின் ஏதென்ஸ் நகரில் பகுத்தறிவுக் கொள்கைகளைப் பரப்பியவர் சாக்ரடீஸ்.முதல் மனைவி இறக்கவே இரண்டாவது திருமணம் செய்தார்.முதல் மனைவிக்கு எதிர்மறையான குணம் கொண்டவர்.தன் கணவனுக்கு எதுவுமே தெரியாது என்று நினைப்பாள்.வெட்டியாகப் பேசுபவர் என்று நகைப்பாள்.ஒருமுறை கணவனை அழைக்கிறார் சாக்ரடீஸ் பகுத்தறிவுப் பிரசங்கம் செய்து கொண்டிருக்கிறார்.அழைப்பு காதில் விழவில்லை பிறகு அவரின் மனைவி கத்துகிறார்.பிறகு பாத்திரத்தைத் தூக்கி வீசுகிறார். அதற்கும் செவிமடுக்காததால்

தண்ணீரைக் கொண்டுவந்து தலையில் கொட்டுகிறார்.அப்போது சாக்ரடீஸ் இவ்வாறு உரைக்கிறார்.

"இந்த எதிர்பாராத சம்பவத்தால் சாக்ரடீஸ் திடுக்கிட்டார்.என்றும், ஆத்திரம் அடையவில்லை தன் நண்பரைப் பார்த்து இவ்வளவு நேரம் வானம் மின்னியது, இடி இடித்தது இப்போது மழை பெய்கிறது. அவ்வளவுதான் என்று அமைதியாகக் கூறினார். என்கிறது உலக வரலாறு என்னும் நூல்.[16]

இருபதாம் நூற்றாண்டில் பகுத்தறிவுக் கொள்கைகளைப் பரப்ப வந்த பெரியார் சந்தித்த இன்னல்கள் பல உண்டு.ஆனால் அதற்கெல்லாம் அஞ்சா நெஞ்சம் கொண்டவராக விளங்கி பலரின் எதிர்ப்பைச் சந்தித்தார்.பகுத்தறிவுக் கருத்தைப் பரப்பும் இடத்தில் ஒருவன் செருப்பைக் கொண்டு வீசினான். அப்போது பெரியார் இன்னொரு செருப்பையும் வீசு நான் பயன்படுத்திக் கொள்கிறேன் என்று எதிர்மொழி தந்தார்.

யாரப்பா அங்கே....
ஒற்றை செருப்பை எறிந்தாய்
ஒன்றைக் கொண்டு என்ன செய்ய?
நெஞ்சில் உரம் இருந்தால்
மீதி இருப்பதையும் போட்டுவிடு
மிதித்து நடக்க உதவும்,
.....
.....
புற்றுக்குள் பாம்புகள்
புகுந்து மறைவது போல
ராமன் வாரிசு
நகர்ந்து மறைந்தான்
தமிழர், தலையில் சுமந்த
செருப்பை
முதன் முதலாகக்
காலில் போட்டு மிதித்தது
பெரியார் ஒருவரே [17]

என்று பிரபஞ்சனின் கவிதை வரிகளில் சாதிய ஏற்றத்தாழ்வு போகப் பெரியார் செய்த தொண்டும் பொறுமையும் சிறப்பானது என்பதை விளக்குகிறது.மனிதனுக்கு

மனிதன் அடிமை அல்ல ஒரு மனிதனின் காலில் இன்னொருவன் விழுதல் கூடாது போன்ற அடிமைத்தனத்திற்கு எதிரான முற்போக்குச் சிந்தனையை நபி அவர்கள் மக்களிடத்தில் கொள்கைப் பிரகடனம் செய்தவர். ஓரிறைக் கோட்பாட்டைச் சொல்ல முற்பட்டபோது பல இன்னல்களை அவர் சந்தித்தார்.அதில் குறைசியர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.நபி அவர்களைக் கொல்ல முயற்சி செய்தவர்கள்.அதுபோல வயதானப் பெண்மணி ஒருவர் நபிகள் நாயகத்தின் கொள்கையை எதிர்த்து தினமும் அவர் தலையில் குப்பைக் கொட்டினார்.ஆனாலும் நபிகள் ஒருபோதும் பொறுமை இழக்காதவராகவே இருந்தார்.அந்தப் பெண் உடல் நிலை பாதிக்கப்பட்டபோது நலம் விசாரித்து ஆறுதல் கூறினார். இன்னா செய்தாரைத் தண்டித்தல் எப்படி என்றால் அவர்களுக்கு மேலும் நன்மை செய்வதே என்ற வள்ளுவரின் வாக்கினைப் போல் நபி அவர்களின் செயல்பாடு அமைந்தது. அந்தக் குப்பைக் கொட்டும் கிழவியின் செயலை மேத்தா தம் கவிதைகளில்,

குப்பைத் தன்மேல் கொட்டும் கிழவியைக்
கோபமாய் அண்ணல் பார்ப்பதில்லை!
கூவி வலம்வரும் கோகிலத் தின்குரல்
வெயிலில் புழுங்கி வேர்ப்பதில்லை

தப்பென அந்த மூதாட்டிக்குச்
சற்றும் குற்றம் தெரியவில்லை
தாஹா நபியின் நெஞ்சம் அதனால்
தணலாய் மாறி எரியவில்லை![18]

என்று நபிகளாரின் பொறுமையை மேற்கூறியக் கவிதைவரிகள் எடுத்துக் கூறின. தலைமைப் பொறுப்பில் இருக்கும் சான்றோன் எத்தகைய சகிப்புத் தன்மையைக் கொண்டிருக்க வேண்டும் என்பதற்கு நபிகள் நாயகம் ஒரு எடுத்துக்காட்டாகும்.

இறைவன்
அகிலத்திற்கே ஓர்
அருட்கொடையாக
சாந்த நபிகளை
ஜக்காத் வழங்கினான்[19]

என்ற வரிகள் நபிகள் நாயத்தின் அறவழிப்பாதை மண்ணுயிர்க்கெல்லாம் மகத்துவமாய் அமைந்தது என்று எடுத்துரைக்கிறது.இன்னும் சிறப்பாக மற்றொரு இடத்தில் மேத்தா பதிவிடுகிறார்.

பசித்தவர்க் குணவும்
பதைத்தவர்க் குடையும்
நசிந்தவர்க் குயர்வும்
நல்கிய வள்ளலே![20]

என்ற வரிகள் பெருமானார் கையாண்ட மனித குலத்திற்குத் தேவையான சமூக நீதி சொல்கிறது.

அனைவரும் சமம்

மனிதனுக்கு மனிதன் பார்த்தால் தீட்டு, தொட்டால் தீட்டு என்ற வர்க்கபேதம் இன்னும் இம்மண்ணில் இருக்கிறது. ஆனால் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே அனைவரும் சமம் என்ற சமத்துவத்தை மக்களுக்குப் போதித்ததோடு மட்டுமல்லாமல் அதன்படி வாழ்ந்தும் காட்டினார் நபி (ஸல்) அவர்கள்.இதனை மேத்தா தன் கவிதைகளில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

அவையிலே நுழையுங் காலை
அங்குளோர் எழுந்து நின்றால்
தவறென்பார்! அனைவ ரும்நாம்
சமம் என்பார்! தழுவிக் கொள்வார்![21]

முடிவுரை

நபி அவர்களின் வாழ்க்கை வரலாற்றைச் சொல்லும் நூலாக 'நாயகம் ஒரு காவியம்' என்னும் கவிதைத் தொகுப்பு அமைகிறது.சமத்துவக் கொள்கை, மறுமணக் கொள்கை, ஈகைக் குணம், ஏழைக்கு முன்னுரிமை, மாற்று சமுதாய மதிப்பு, பொறுமைக் குணம் போன்றவற்றை முன்மொழிகிறது.சாதியால், மதத்தால் பிரிந்திருக்கும் இன்றைய மனித குலத்திற்கு நபிகளாரின் 'ஞான உபதேசம், அறியாமை இருளைப் போக்குதட அரும் மருந்தாகும்' என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.அதன் பொருட்டே 'மார்க்கப் படகுக்கு மாலுமியாய் வந்தவரே!மானுடத்தின் மேன்மைக்கு மகத்துவங்கள் தந்தவரே' என்றார் மு.மேத்தா.

அடிக்குறிப்புகள்

1. ஐ.சண்முகநாதன், உலக வரலாறு, பூம்புகார் பதிப்பகம், சென்னை-18, செப்டம்பர் 2003, ப.11
2. மு.மேத்தா,நாயகம் ஒரு காவியம், மல்லிகைப் பதிப்பகம், சென்னை-90, ஜூன் 2003, ப.55
3. மேலது, ப.56
4. மேலது, ப.09
5. ச.வே.சுப்பிரமணியம், புறநானூறு மூலமும் தெளிவுரையும், மணிவாசகர் பதிப்பகம், சென்னை-108, ப.700
6. பாரதிதாசன் கவிதைகள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை-108, 6-ஆம் பதிப்பு 2008,ப.120
7. மு.மேத்தா,நாயகம் ஒரு காவியம், மல்லிகைப் பதிப்பகம், சென்னை-90, ஜூன் 2003, ப.51
8. மேலது, ப.98
9. மேலது, ப.98
10. மேலது, ப.43
11. மேலது, ப.137
12. மேலது, ப.38
13. மேலது, ப.39
14. மேலது, ப.92
15. பிரபஞ்சன், ஈரோடு தமிழர் உயிரோடு, கவிதா பதிப்பகம், சென்னை-17, ஜூலை 1998, ப.22
16. ஐ.சண்முகநாதன், உலக வரலாறு, பூம்புகார் பதிப்பகம், சென்னை-18, செப்டம்பர் 2003, ப.11
17. பிரபஞ்சன், ஈரோடு தமிழர் உயிரோடு, கவிதா பதிப்பகம், சென்னை-17, ஜூலை 1998, ப.37
18. மு.மேத்தா,நாயகம் ஒரு காவியம், மல்லிகைப் பதிப்பகம், சென்னை-90, ஜூன் 2003, ப.80
19. மேலது, ப.20
20. மேலது, ப.212
21. மேலது, ப.219

Reference

1. I.Sanmuganathan, Ulagavaralaru (Sep.2003), Poombukar Publications, Chennai-08, P.11
2. Mu.Metha, Nayagam Oru Kaviyam (June 2003), Malligai Publications, Chennai-90,P.55
3. Ibid, 56
4. Ibid, 09
5. Sa.Ve.Subramaniyan (Text Editor) (June. 2010), Purananooru, Manivasagar Publications, Chennai-108, P.700
6. Bharathidasan Kavithaigal, Manivasagar Publications, Chennai-108,P.120
7. Mu.Metha, Nayagam Oru Kaviyam (June 2003), Malligai Publications, Chennai-90, P.51
8. Ibid, 98
9. Ibid, 98
10. Ibid, 43
11. Ibid, 137
12. Ibid, 38
13. Ibid, 39
14. Ibid, 92
15. Prabanjan, Erode Thamilar Uiroodu (July, 1998),Kavitha Publications, Chennai-17,P.37
16. I.Sanmuganathan, Ulagavaralaru (Sep.2003), Poombukar Publications, Chennai-08, P.22
17. Prabanjan, Erode Thamilar Uiroodu(July, 1998), Kavitha Publications, Chennai-17, P.37
18. Mu.Metha, Nayagam Oru Kaviyam (June 2003), Malligai Publications, Chennai-90, P.80
19. Ibid, 20
20. Ibid, 212
21. Ibid, 219